
பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஹு ஆடி மீ 22 உ. செவ்வாய்க்கிழமை (07-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 13 கதிர்: 157

## களத்தில் பலியான வீர வேங்கைகள் மீளாத் துயிலில்



மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த போராளிகளின் பூதவுடல்கள். (உ-10)

### அம்பாறை மாவட்டத்தில் சூட்டுக் காயங்களுடன்

# முஸ்லிம்களின் சடலங்கள் தொடர்ந்து கண்டுபிடிப்பு!

கொழும்பு, ஆக. 7

கிழக்கிலங்கை அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் தொடர்ந்து முஸ்லிம்களின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டு வருவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

நேற்று மட்டும் 33 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

நேற்று பாலமுனை கிராமத்தில் வயலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்ததாகக் கருதப்படும் 17 முஸ்லிம்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்கள்.

அம்பாறைக்கும் அக்கரைப்பற்றுக்கும் இடையில் மூன்று வெவ்வேறு இடங்களில் மொத்தம் 33 முஸ்லிம்களின் சடலங்கள் நேற்று கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இலங்கைக்கு ஆயுதம் விற்க ஆஸி. அரசு தடைவிதிப்பு

கன்பரா, ஆக. 7

இலங்கைக்கு 76 மில்லி மீற்றர் குண்டுகளை விற்பனை செய்யும் முயற்சிக்கு ஆஸ்திரேலிய அரசு தடைவிதித்துள்ளது.

மேற்படி குண்டுகளை இலங்கைக்கு விற்பனை செய்வதற்கு ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்று முனைந்தது. இந்த முயற்சிக்கே ஆஸ்திரேலிய

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலிலும் நேற்று பொம்மர் தாக்குதல்!

நேற்று மாலை 4.30 மணியளவில் நகரின் மீது வட்டமிட்ட பொம்மர் ஒன்று திடீரென கொக்குவில் புதுக் கோவில்முருகன் ஆலயத்திற்கு அருகில் ரொக்கட் தாக்குதலை நடத்தியது.

வீதியில் நின்ற உலகநாதன், கனகேந்திரம் ஆகிய இருவர் காயமடைந்தனர். முருகன் கோவிலும் சிறிது சேதமுற்றது. (உ-5)

## இந்திய மீனவர் மீது இரும்புக் கம்பித் தாக்கு!

கச்சதீவுக்கு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நான்கு இந்திய மீனவரை இலங்கைக் கடற்படையினர் தடுத்து நிறுத்தி இரும்புக் கம்பியால் அடித்துக் காயப்படுத்தினர்.

அவர்கள் வைத்து இருந்த மீன்களையும் படகையும் வலைகளையும் கடற்படையினர் அபகரித்துச் சென்று விட்டதாக தப்பி வந்த மீனவர்கள் இராமேஸ்வரத்தில் அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

கடுமையான காயங்களுக்காளான இரண்டு மீனவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர் என்று இந்திய வானொலி தெரிவித்தது. (உ-எ)

## கோட்டைக்குள்ளும் நேற்று இறுதிச்சடங்கு நிகழ்ச்சி!

கொழும்பு, ஆக. 7

யாழ். கோட்டை முகாமினுள் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் உயிரிழந்த மூன்று படையினரின் இறுதிச் சடங்குகள் நேற்று நண்பகலுக்குப் பின்னர் கோட்டைக்குள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வேளையில் கோட்டையை நோக்கி வி[illegible]

(2 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை பணிமனை நோக்கி பொம்மர் 'ரொக்கட்' தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஆக 7

யாழ்ப்பாணம் றக்கா வீதி-கோயில் வீதி சந்தியில் அமைந்திருக்கும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். பணிமனையை நோக்கி நேற்றிரவு 9 மணியளவில் பொம்மர் ஒன்றிலிருந்து ரொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் இந்த ரொக்கட்டுகள் பணிமனைக்கு முன்னால் இருந்த வெறும் காணியிலே விழுந்து வெடித்ததால், பணிமனை சேதம் ஏதுமின்றித் தப்பியது.

நேற்றிரவு நகருக்கு மேல் திடீரென வந்த விமானம் ஒன்று, அடுத்தடுத்து ஐந்துக்கும் அதிகமான ரொக்கட்டுகளை இந்த அலுவலகத்தை நோக்கி ஏவியது.

யாழ் நகர் இருளில் மூழ்கி இருந்தவேளை, இந்த அலுவலகத்தில் மட்டும் மின்சார பல்புகள் எரிந்து கொண்டிருந்ததாகவும் —

பல்புகள் எரிந்து வெளிச்சமாக இருப்பதை அவதா

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணமடைந்த போராளிகளுக்கு சோகம் ததும்ப மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 7

யாழ்ப்பாணம் கோட்டை மீது தாக்குதல் நடத்தி வீரமரணமடைந்த 27 விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளில் பன்னிரண்டு பேரின் தகனக் கிரியைகள் நேற்று மாலை மானிப்பாயில் நடைபெற்றன.

அவர்களது பூதவுடல்கள் மக்கள் அஞ்சலி செலுத்தும் பொருட்டு, நேற்றுக் காலை பத்து மணியில் இருந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வைக்கப்பட்டிருந்தன.

ஆயிரக் கணக்கான மக்கள் போராளிகளின் பூதவுடலுக்கு சோகம் ததும்ப, கண்ணீர் மல்கி, கதறி அழுது அஞ்சலி செலுத்தினர்.

ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள், சிறுவர்கள் என்று எல்லாத் தரப்பினரும் வரிசையில் சென்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள். போராளிகளின் தாய் தந்தையரும், உறவினர்களும், நண்பர்களும் கதறி அழுதது

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கப்பல் மூலம் மா வந்ததும் பங்கீட்டு அளவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 7
திருகோணமலையில்இருந்து கப்பல் மூலம் இவ்வாரம் மா வந்து சேர்ந்ததும் பங்கீட்டு அளவு மூன்று கிலோவாக அதிகரிக்கப்படும் என்று யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

தற்சமயம் பங்கீட்டு அடிப்படையில் ஒரு குடும்பத்துக்கு ஒரு கிலோ மாவே வழங்கப்பட்டு வருகிறது. (இ-3)


## சின்னஞ்சிறு விளம்பரம்

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக]. தினசரி பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [13993]

### Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கவும் Fudo Enterprises (Shiva Studio Upstair) Jaffna Road, Manipay. (சி-5289)


## அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஆக. 7
விக்னா மாணவர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அகதிகளுக்கு உணவுப்பண்டங்களும உடுபுடைவைகளும் சவர்க்காரம், தேங்காய், முதலியவையும் வழங்கப்பட்டுள்ளன.

கொக்குவில், சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை, இணுவில், கல்வியங்காடு, முஸ்லிம வட்டாரம் ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

## ஊக்குவிப்பு

சாவகச்சேரி, ஆக. 7
நுணாவில் கிழக்கு சிற்றூர் அலவ சமத் தொழில் ஆய்வு நிலையம் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவித்து வருகிறது. (இ-31)

## புத்தக வங்கி

சாவகச்சேரி, ஆக. 7
அறவழிப் போராட்டக்குழு மற்றுமொரு மக்கள் திட்டமாக 'புத்தக வங்கி' திட்டத்தை ஆரம்பிக்க உள்ளது.

கண்டி வீதி, கைதடி நுணாவிலில் உள்ள அறவழிப் பொதுநூலகம், சிறுவர் நூலகம் ஆகியவற்றின் ஒரு பகுதியில் புத்தக வங்கி இயங்கும்.

புத்தக வங்கியை ஆரம்பிப்பதற்கான வேலைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-31)

## பள்ளிவாசல் பாதுகாப்புக்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஆக. 7
பள்ளிவாசல்களைச் சுற்றிய பாதுகாப்பை பலப்படுத்தும்படி ஜனாதிபதி பிரேமதாஸா பாதுகாப்பு அமைச்சுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார். (இ-எ)

## கனடா அதிர்ச்சி தெரிவிப்பு

கொழும்பு, ஆக. 7
காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைச்சம்பவம் குறித்து கனடாவின் வெளியுறவு அமைச்சர் ஜோகிளார்க் அதிர்ச்சி தெரிவித்தார். (இ-எ)

## ரோமா புரியில் ஈழத்து சிறுகதை நூல்

ஈழத்து ஆக்கங்களுக்கு, ரோமாபுரியில் உள்ள இலங்கைத் தமிழர்கள் ஊக்கமளிக்க வேண்டும்.

எழுத்தாளர் ஜோசப் பாஸாவின்' திருப்பம்' சிறுகதைத் தொகுதியின் அறிமுகவிழா சடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி ரோமாபுரியில் நடைபெற்றபோது தலைமை வகித்த திரு.மரியதாஸ் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

அருட்சகோதரி சோபியாவால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேற்படி விழாவிற்கு இலங்கைத் தமிழர்கள் அதிகப்படியாக வருகை தந்திருந்தனர். (அ-51)

## 125 இலங்கை பிரசைகளை ஈராக் படை விடுவித்தது

குவைத் நாட்டில் பல்வேறு குற்றங்களுக்காக சிறைவைக்கப்பட்டிருந்த 125 இலங்கைப் பிரசைகளை ஈராக் துருப்புக்கள் விடுதலை செய்தனர் என்றுகொழும்புக்கு கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இவர்களில் 5பேர் கர்ப்பிணிப் பெண்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## ஒரு வித இரைச்சலுடன் குண்டு விழுந்து வெடித்தது

### உயிர் தப்பிய பெண் தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 7
சமைப்பதற்காக அடுப்பில் அரிசிப் பானையை வைத்துவிட்டு அரிசியைத் துப்புரவு செய்துகொண்டிருந்தேன். அப்போது விமானத்தில் இருந்து ஏவப்பட்ட குண்டுஒன்று ஒருவித இரைச்சலுடன் வந்து நாம் நின்றஇடத்தில் விழுந்து வெடித்தது.

நேற்று முன்தினம் பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை அகதி முகாமில் இடம்பெற்ற தாக்குதலில் சாயம் அடைந்த அ. ஜூட் (வயது 20) என்றபெண் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நகரில் விமானங்கள் குண்டு போடுவதைஎமது அகதிமுகாம்களில் நின்று பலர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென ஒருவித இரைச்சலுடன் குண்டு ஒன்று வந்து வெடித்தபோது நாம் இருந்த இடம் ஒரே புகைமண்டலமாகக் காட்சி அளித்தது. புகை விலகியபோது பலர் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக்கண்டேன்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். [இ 10]

## புறப்பட்டனர்

அத்தியாவசியப் பொருள்களுடன் பருத்தித்துறைக்கு வந்த கப்பல், பொருள்களை இறக்கிவிட்டு வெளிநாட்டு பாஸ்போர்ட்காரரை ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் மாலை கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

சனிக்கிழமை காலை வந்து சேர்ந்த கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகளை தொழிலாளர்கள் துரிதமாக மேற் கொண்டனர்.

உணவுப் பொருள்களும், மருந்து வகைகளும், தபால் பொதிகளுட்கப்பலில் கொண்டுவரப்பட்டிருந்தன. (இ-3)

## கப்பல் மூலம் வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஆக. 7
ஓய்வூதிய வவுச்சர்கள் கப்பல மூலம்நேற்று முன்தினம் வந்து சேர்ந்தன.

ஜூலை மாதத்துக்கான வவுச்சர்கள்வந்துசேராததை அடுத்து வவுச்சர்களைத் தயாரிக்கும் வேலைகள் செயலகத்தில் நடைபெற்று வந்தன. (இ-3)

## சங்கானையில் ரொக்கட் ஷெல்

வட்டுக்கோட்டை, ஆக. 7
கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சங்கானைப் பகுதியில் வட்டமிட்ட ஹெலி ஒன்று திடீரென ரொக்கட் ஷெல் தாக்குதலை நடத்தியது.

சங்கானை தனியார் மருத்துவ மனைக்குச் சமீபமாக நின்ற பனை ஒன்றுடன் இந்த ஷெல் மோதி வெடித்தது.

வெடித்துச் சிதறிய சன்னம் பாய்ந்ததில் தர்மினி என்ற பெண் காயமுற்றார்.

அதேவேளை வட்டுக்கோட்டைச் சந்தியிலும் ஹெலி ரொக்கட் தாக்குதலை நடத்தியது. எனினும் விபரீதம் ஏதும் ஏற்படவில்லை. (இ-161)

## தமிழக மீனவரை விடுவிக்க முயற்சி

சென்னை, ஆக. 7
இலங்கைக் கடற்படையினர் பிடித்த 8 தமிழக மீனவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி தமிழக முதலமைச்சர் கருணாநிதி இந்திய வெளியுறவு அமைச்சர், கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஆகியோரைக் கேட்டிருக்கின்றார். (இ-எ)

## மிதிவெடியில் சிக்கி மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 7
கிளிநொச்சிராணுவ முகாம் இருந்த பகுதியில், படையினர் விட்டுச் சென்ற மிதிவெடிகளை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது அந்த மிதிவெடிகளில் ஒன்றில் சிக்கி போராளி ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த ஞாயிறு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பாலன் (உமையாள்புரம்) என்ற போராளியே மரணமானார். (உ-9)

## எரிப்பு

திருநெல்வேலி, ஆக. 7
ஜனாதிபதி பிரேமதாஸா, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா, இராணுவ உப தளபதி டென்சில் கொப்பேகடுவ ஆகியோரின் கொடும்பாவிகள் தாவடி, கோண்டாவில், இணுவில் பகுதிகளில் எரிக்கப்பட்டன. [ஒ-143]


## யாழ். இந்துவின் பழைய மாணவர்களுக்கு

தற்போதைய சூழ்நிலையில் இடம்பெயர்ந்து வந்துள்ளோருககு உதவி செய்வது சம்பந்தமாக ஆராய்வதற்கு எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் எல்லோரையும் 11 - 08 - 90 காலை 9.30 மணிக்கு கல்லூரியில் ஒன்று கூடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சு. டிவகலாலா
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.
C/5151

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

### நிர்வாகசபைக் கூட்டம்

இடம் : ''யூனிவேர்சல்'', கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
காலம்: 7-8-90 (செவ்வாய்) காலை 10 மணி
நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

### பொதுச்சபைக் கூட்டம்

இடம் : யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை (யாழ. கல்வித் திணைக்களத்திற்கு அருகாமையில்)
காலம்: 9-8-90 (வியாழன்) காலை 10 மணி
பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

செயலாளர்
[13613]

## IN MEMORIAM

**Emma Rosalind Goonasegaram**

Birth: 9th March 1914
Entered Glory: 7th August 1989

'To live in the hearts of loved - ones is not to die'

Members of the family

25, Somasunderam Avenue,
Chundikuli. [13615]


## கோட்டை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தாக்குதல் நடத்தியதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (உ)

## இலங்கைக்கு --

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தடைவிதித்திருக்கிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்தும்-

இதனால் மக்கள் பெருமளவில் அகதிகளாக்கப்படுவதையிட்டும் -

இந்த விடயம் தொடர்பாக ஐக்கியநாடுகள் கவலை கொண்டிருப்பதுபற்றியும் -

மேற்படி ஆயுத விற்பனை தடைசம்பந்தமான அறிக்கையில் அவுஸ்திரேலிய அரசு குறிப்பிட்டுள்ளது. (உ)

## வீரமரண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போலவே, அவர்களைத் தெரியாத பொதுமக்களும் சோகம் தாங்காது அழுதனர்.

வெளியூர்களில் இருந்தும் ஏராளமான மக்கள் லொறிகளிலும், சைக்கிள்களிலும் வந்திருந்தனர். மானிப்பாய் பகுதி எங்கும் சறுப்புக் கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. கடைகள் மூடப்பட்டிருந்தன.

மாலையில் அஞ்சலி நிகழ்ச்சியைத் தொடர்ந்து சுமார் 5 மணியளவில் பிரேத ஊர்வலம ஆரம்பமானது. புலிக்கொடிகளால் போர்க்கப்பட்ட பிரேதப் பெட்டிகள் வாகனங்களில் ஏற்றப்பட்ட போது மக்கள் பெருங்குரல் எடுத்து, ஓலமிட்டு அழுதனர்.

மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் பன்னிருவரின் சடலங்களும் (இவர்களில் நால்வர் பெண் போராளிகள்) அவர்களின் தந்தையரும், சகோதரரும் சிதைக்கு தீ மூட்ட அக்கினியுடன் சங்கமமானது.

மயானத்தில் தகனக் கிரியைகள் நடந்துகொண்டிருந்த போது ஹெலி ஒன்று மேலே பறந்தது. மக்கள் ஏது நடக்குமோ எனப் பீதியுற்றனர். ஆனால் அது வெறுமனே நோட்டமிட்டுச் சென்றது. (அ-3-5-10)

## செஞ்சிலுவை---

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

னித்து, இந்தத் தாக்குதல் பொம்மரிலிருந்து நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் அயலவர் ஒருவர் தெரிவித்தார்.

மாடி வீட்டில் அமைந்திருக்கும் இந்த அலுவலகத்தின் உச்சியில் செஞ்சிலுவைச் சங்கத்தின் பெரிய கொடி ஒன்று பறக்கவிடப்பட்டிருக்கிறது. இரவிலும் இந்தக் கொடி தெளிவாகத் தெரியக்கூடியதாக அதனை நோக்கி விசேட பல்புகளினால் ஒளி வெள்ளம் பாய்ச்சப்பட்டிருந்தது.

இதேவேளை —
செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச பிரதிநிதிகள் தங்கியிருந்த — யாழ். பலாலி வீதியில், இலுப்பையடிச் சந்திக்கும் ஆரியகுளத்துக்கும் இடையில் உள்ள — வீடும் கடந்த ஞாயிறு அதிகாலை நடந்த பொம்மர் தாக்குதலினால் சேதமுற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அம்பாறைப்பேச்சின் அர்த்தம் புரிகிறது!

ஜனாதிபதி பிரேமதாசா, கடந்த வாரம் அம்பாறையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில், விடுதலைப் புலிகளுடனான யுத்தம் தற்காலிகமானது என்றும், வடக்கு-கிழக்கில் விரைவில் அமைதி திரும்பிவிடும் எனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதி அம்பாறையில் அப்படிச் சொன்னது ஒரு யுத்த தந்திரம் என்றே விஷயமறிந்த அவதானிகள் ஊகித்தார்கள்.

அந்த ஊகம் இப்போது ஊர்ஜிதமாகியுள்ளது மூத்த அமைச்சர்கள் இருவர், ஆயுதங்கள் வாங்குவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள் என்ற இரகசியம் இப்போது அம்பலமாகி இருக்கிறது.

வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் ஐந்து நாடுகளுக்கு ஆயுதம் தேடி அலைந்துவிட்டு வந்திருக்கிறார். அவரது விஜயம் வெற்றியா தோல்வியா என்பது இப்போது இரகசியமாக இருந்தாலும், (அவரது வெளிநாட்டுப் பயணத்தைப் போல) இன்னும் சில நாட்களில் வெளிச்சத்துக்கு வராமலா போகும்?

அமைச்சர் ரஞ்சன் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், மேற்காசிய நாடுகளுக்கும் ஆயுதம்தேடி ஆலாய் பறந்திருப்பதும் உலக மட்டச் செய்தியாகிவிட்டது. ஈரான், ஈராக், லிபியா, துருக்கி ஆகிய நாடுகளில் முதற் காலைப் பதித்த அவருக்கு, (அவரின் பணிக்கு) குவைத் பிரச்சினை பெரும் குழப்பத்தைக் கொடுத்துள்ளது!

அவுஸ்திரேலியா, பெல்ஜியம், சீனா, கனடா ஆகிய நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு ஆயுதம் விற்க மறுத்துவிட்டன. ஏனைய நாடுகளும் அதே பட்டியலில் விழுந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் பிரேமதாசா மூத்த அமைச்சர்களை ஆயுதம் வாங்க அவசர அவசரமாக அனுப்பி இருக்கிறார்.

தற்காலிக யுத்தம் நடத்தும் அரசுக்கு இப்போதுள்ள ஆயுதக் கையிருப்புப் போதாதா? அரசாங்கம் ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தத்தையாவது கொண்டுவர உள்நோக்கம் கொண்டிருந்தால்தானே, அமைதி திரும்பும் என்ற நம்பிக்கை உதிக்கமுடியும்? அப்படி ஓர் உள்நோக்கம் இருந்தால், ஆயுதக் கொள்வனவுக்கு அவசரப்படுவேது ஏன்?

எனவே அம்பாறைப் பேச்சு முழுக்க முழுக்க எதிர்மறைப்பேச்சே! யுத்தம் தொடரும். இப்போது உள்ள ஆயுதங்களைவிடப் பயங்கர ஆயுதங்கள் வாங்கப்படும். ஆயுத பலமும் ஆளணிப் பலமும் அதிகரிக்கப்படும். இவற்றையே அந்தப் பேச்சு பிரதிபலித்தது!

அரசு தனது சகல பலங்களையும் கூட்டிக் கொள்வதற்கு வசதியாகத்தான், வடக்கு - கிழக்கு யுத்தம் தமிழருக்கு எதிரானதல்ல என்றும், பேச்சுவார்த்தையைக் குழப்பி யுத்தத்தைத் தொடங்கியவர்கள் விடுதலைப் புலிகள்தான் என்றும் வெளி உலகத்தில் தீவிர பிரசாரம் செய்யப்படுகிறது.

உண்மை நிலையை எடுத்துச்சொல்லும் அளவுக்கு, சர்வதேச மட்டத்திலான தமிழர் தரப்புப் பிரசாரம் முடுக்கிவிடப்படாவிட்டால், அரசுக்கு ஆயுதம் விற்க இணங்கிய ஈரானின் வரிசையில் ஏனைய நாடுகளும் சேர்ந்துகொள்ளும் அபாயம் உண்டு.

அவைகளுக்கென்ன, பணம்தானே தேவை.

# 1,300 ஏக்கர் பயிர் நிலம் தண்ணீர் இன்றி அழிகின்றது

### முல்லைத்தீவு

முல்லைத்தீவுப் சுணுக்கேணி குளத்தினால் நீர்ப்பாசனம் பெறும் பகுதியில் உள்ள ஏறத்தாள 1,300 ஏக்கர் பயிர் நிலங்கள் போதிய தண்ணீர் இன்றி அழிகின்றன.

குளத்தினால் நீர்பாசனம் பெறுவோரின் தீர்மானத்தை மீறி விவசாயிகள் இரட்டிப்பு மடங்காக பயிர் செய்கையில் ஈடுபட்டதாலேயே இந்நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (மு-113)

### மின்சாரம் கிடைப்பதில்லை

சுன்னாகத்தில் இருந்து வழங்கப்படும் சுழற்சி முறை மின்சாரம் மட்டுவில் மத்தி, சந்திரபுரம் நுணாவில் மேற்கு கல்வயல் பகுதிகளுக்குக் கிடைப்பதில்லை- (இ-31)

# வங்கியைத் திறக்குமாறு அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 7

முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளை தொடர்ந்து மூடப்பட்டிருப்பதால் முல்லைத்தீவு செயலகத்தின் நிர்வாகவேலைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு செயலகத்தின் வங்கிக் கணக்கு முல்லைத்தீவு இலங்கை வங்கியிலேயே உள்ளது. இந்தக் கிளை மூடப்பட்டிருப்பதால் செயலகத்தின் கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகளும், அதனால் நிர்வாக வேலைகளும் பாதிக்கப்பட்டிருப்பதாக அரச அதிபர் மேலும் சொன்னார்.

இலங்கை வங்கியை மீண்டும் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை வங்கி உயர்பீடம் உடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

முல்லைத்தீவு மக்கள் வங்கி தொடர்ந்து இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## விலை அதிகரிப்பு

நெடுந்தீவு, ஆக. 7

நெடுந்தீவில் அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் விலை கிடுகிடுவென அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

பிற இடங்களில் இருந்து பாவனைப் பொருள்களை நெடுந்தீவுக்கு எடுத்து வருவதில் ஏற்பட்டிருக்கும் சிக்கல் காரணமாகவே இந்த விலை அதிகரிப்பு எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அங்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பங்கீட்டு அடிப்படையில் அத்தியாவசிய பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. [உ-111]

# டிரான்ஸ்போமர் ஒயிலும் இப்போது திருட்டு!

சாவகச்சேரி, ஆகஸ்ட் 7

எரிபொருள் மற்றும் எண்ணைப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கி காரணமாக எண்ணைத் திருடர்கள் மின்சார டிரான்ஸ்போமர்களையும் விட்டு வைக்கவில்லை.

ஆங்காங்கே டிரான்ஸ்போமர்களிற்கும் நிரப்பப்பட்டிருக்கும் ஒருவகை ஒயிலையும் (எண்ணையையும்) திருடுவதில் ஒரு கோஷ்டி தற்போது ஈடுபட்டு வருகிறது.

நுணாவில் சந்திக்கு அண்மையில் உள்ள டிரான்ஸ்போமரில் இருந்தும் ஒயில் திருடப்பட்டுள்ளது. ஒரு பகுதி ஒயில் அப்பகுதியில் நிலத்தில் சிந்திக்கிடந்தது.

இந்த ஒயில் அகற்றப்பட்டுள்ளதால் மேற்படி டிரான்ஸ்போமர் செயல் இழந்துள்ளது.

இதனால் நுணாவில், மட்டுவில் கிராம மக்கள் சுழற்சி முறையில் பெற்று வந்த ஒரு மணி நேர மின்சாரத்தைக் கூட இப்போது பெறமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. (உ-31)

# கட்டட ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு இல்லை!

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் பாடசாலைக் கட்டடங்கள் அமைப்பு மற்றும் திருத்த வேலைகளைச் செய்த ஒப்பந்தகாரர்கள் தமக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என கவலை தெரிவித்திருக்கின்றனர்.

புதிய கட்டிடங்கள் அமைப்பு மற்றும் திருத்த வேலைகளுக்கென வைப்பிடப்பட்ட பணம் திணைக்கள ஊழியர்கள். ஆசிரியர்கள் ஆகியோரின் சம்பளக் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுவிட்டதாக ஒப்பந்தகாரர் ஒருவர் விசனத்துடன் தெரிவித்தார். (உ-111)

## வீட்டில் விழுந்த சன்னம்

கோட்டை முகாமில் இருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கிக் குண்டின் சன்னம் மணல்தரை வீதியிலுள்ள ஒரு வீட்டில் வந்து விழுந்தது.

தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை. [ஒ-143]

# இந்திய அரசியலைக் குழப்பும் உட்கட்சிப் போர்

கடந்த வெள்ளிக்கிழமை புதுடில்லியில்நடந்த தேசிய முன்னணிக் கூட்டத்தில் முன்னாள் துணைப் பிரதமர் தேவிலால் உட்பட அனைத்து எம். பிக்களும் வி. பி. சிங் அரசுக்கு ஆதரவு வழங்கியதுமூலம் இந்திய அரசியலில் உருவான நெருக்கடி தணிந்துள்ளது. எனினும் அது நீறுபூத்த நெருப்பாகவே இன்னும் இருந்துவருவதாக அரசியல்அவதானிகள் கருதுகிறார்கள்.

சுமார் ஏழு மாதங்களுக்கு முன்னர் வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்தபோது, ஆகக்கூடியது ஆறு மாதங்கள் தான் இந்த அரசு பதவியில் இருக்கும் என்று அரசியல் ஆரூடம் கூறப்பட்டது.

வி. பி. சிங் அரசு சிறுபான்மை அரசாக இருந்ததே இதற்குக் காரணம்.

பாரதீய ஜனதாக் கட்சியையும் மற்றும் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் நம்பியே திரு. வி. பி. சிங் அரசாங்கத்தை அமைத்திருந்தார். இந்த மூன்று கட்சிகளும் அரசாங்கத்துடன் இணையாது வெளியில் இருந்தே ஆதரவு அளித்து வந்தன. எப்போது அவை தமது ஆதரவை விலக்கிக்கொள்கின்றனவோ அப்போது அரசு கவிழும் நிலை இருந்துவந்தது.

### உட்கட்சிப் போராட்டம்

ஆனால் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக உட்கட்சிப் போராட்டமே தற்போது வி. பி. சிங்கிற்குப் பெரும் சவாலாக உருவெடுத்து வருகிறது.

கடந்த பொதுத்தேர்தல் முடிவடைந்தவுடன் பிரதமர் பதவியைப் பிடிப்பதற்கு ஏற்பட்ட போட்டியின் தொடராகவே இந்திய அரசியலில் தற்போது நிகழும் சம்பவங்கள் கருதப்பட்டுவருகின்றன.

கடந்த புதன்கிழமை தேவிலால் பதவிநீக்கத்தோடு உச்சக் கட்டத்துக்குச்சென்ற அரசியல் சூடு, கடந்த வெள்ளிக்கிழமை தேசிய முன்னணிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துடன் தணிந்துவிட்டதாகக் கருத முடியாது என்பதே அரசியல் அவதானிகளின் கணிப்பாகும்.

இந்தக் கூட்டத்தில் தேவிலால் உட்பட சகல தேசிய முன்னணி எம். பிக்களும் வி. பி. சிங்தலைமையிலான அரசுக்கு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தனர். அத்துடன் கடந்த புதன்கிழமை தேவிலால் பதவிநீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்துத் தனது பதவியை இராஜினாமாச் செய்த நாடாளுமன்ற விவகார துணை அமைச்சர் ஜாடீஷ்தாப்கர் தனது பதவி விலகல் கடிதத்தை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளார்.

### முதலாவது நெருக்கடி

வி. பி சிங் தேவிலால் தகராறு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. தேசிய முன்னணி அரசு உருவானபோதே அதுவும் உருவானது.

பிரதமர் பதவிக்கு வி. பி சிங்குடன் போட்டியிட்ட தேவிலால் பின்னர் துணைப் பிரதமர் பதவியுடன் திருப்தி கொண்டு வி. பி. சிங்கின் பெயரைத் தாமே பிரேரித்தார். அத்துடன் அப்போதைய அரசியல் நெருக்கடி தீர்த்து வைக்கப்பட்டது.

### இரண்டாவது நெருக்கடி

பின்பு கடந்தமாத முற்பகுதியில் மீண்டும் அரசியல் நெருக்கடி உருவானது. தேவிலாலின் மகன் ஓம்பிரகாஷ் செளதாலா முதலமைச்சர் பதவியில் இருந்து விலகவேண்டும் என்றுகோரி அருண்நேரு உட்பட 3 அமைச்சர்கள் முதலில் ராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பித்தனர். பின்பு இது 15 ஆக உயர்ந்தது. இறுதியில் வி பி. சிங்கும் ராஜினாமாக் கடிதத்தை கட்சித் தலைவரிடம் அனுப்பினார்.

ஆனால் ஓம்பிரகாஷ் செளதாலா முதலமைச்சர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து இந்த அரசியல் நெருக்கடி தீர்த்துவைக்கப்பட்டது.

### 3ஆம் நெருக்கடி

கடந்தவாரம்ஏற்பட்ட அரசியல் நெருக்கடி முன்னைய நெருக்கடியின் தொடராகவே கருதப்படுகிறது.

★ இந்திய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மூன்று அமைச்சர்கள் மீது 1987ஆம் ஆண்டில் வி பி. சிங் ஊழல் குற்றம் சுமத்தியதாக தேவிலால் வெளியிட்ட போலி எனக் கருதப்படும் கடிதம்.

★ பம்பாயில் இருந்துவெளிவரும் ஆங்கிலப்பத்திரிகைஒன்றுக்கு வி. பி. சிங் அரசைக் கண்டித்து தேவிலால் வழங்கிய பேட்டி.

தமது புதல்வர் ஓம்பிரகாஷ் செளதாலாவை முதலமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்யக்கோரி முதலில் பதவியை ராஜினாமாச் செய்த அருண்நேரு உட்பட்ட மூன்று அமைச்சர்களையும் பழிவாங்கவே தேவிலால் போலிக் கடிதத்தை வெளியிட்டார் என்று கருதப்படுகிறது.

தற்போதைய அரசியல் நெருக்கடியில் தேசிய முன்னணித் தலைவர் என். டி. ராமராவ், தி மு. க. தலைவர் கருணாநிதி, அசாம் கணபரிஷத் தலைவர் வி. கே. மொஷந்தா, காங்கிரஸ் தலைவர் எஸ். சரத் சந்திரசின்ஹா ஆகியோர் வி. பி. சிங்குக்கு பூரண ஆதரவு வழங்கி உள்ளனர்.

பதவி விலக்கப்பட்ட நிலையில் தனது ஆதரவையும் தேவிலால் வழங்கி உள்ளபோதிலும் இந்திய அரசியல் தொடர்ந்து நீறுபூத்த நெருப்பாகவே இருக்கப் போகிறது.

[இ-9]

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### நல்லை நகர் நாதனே!

சிங்கார ரூபேன சங்கரன் புதல்வனே
திருவருட் சக்தி பாலா
மங்காத எழில்பொங்கும் வள்ளி தெய்வானையுடன்
மயிலேறும் நடன முருகா
பங்கயம் போற்றிகழும் பவளமுகம் ஆறுடன்
பன்னி ருகை வேலெடுத்து
பாரினில் அடியவர்கள் சஞ்சலம் அகற்றிடப்
பவனிவரும் கோல மார்பா
ஆருமற்றோர்க்கபயம் நீயலால் வேறு துணை
அவனியில் நாமறி கிலோம்
ஆனந்த மூர்த்தியே ஐங்கரன் தம்பியே
அமரர் இடர் தீர்த்த குமரா
வெம்துயர் களைந்திட உன்அடி இறைஞ்சினோம்
விமலனே ஞான சோதி
எந்தையே நல்லைநகர் நாதனே இத்தருணம்
எமக் கருளி இரட்சிப்பாயே.

தி. மார்க்கண்டு

[இன்று நல்லூர் கந்தசுவாமி ஆலய12 ஆம் திருவிழா]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெலி சுட்டு காயம்

நெடுங்கேணி, ஆக. 7 நெடுங்கேணியில் இடம் பெற்ற ஹெலித்தாக்குதலில் குஞ்சுத்தம்பி என்பவர் காயம் அடைந்து நெடுங்கேணி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



அமரர்

**நாகலிங்கம் தேவபாலசுந்தரம்**

(முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினரும் ஒய்வு பெற்ற விளையாட்டு அலுவலகரும்)

தோற்றம் 01 - 03 - 1929 மறைவு 08 - 07 - 1990

08- 07 - 1990 இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் மரணச்சடங்கில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் எமக்கு உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (செவ்வாய் 07- 08- 1990 இல்) நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திற்கு வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்வதுடன் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

மனைவி, மகன்.

''தேவஸ்தான்''
கைதடிச் சந்தி,
கைதடி.

(13987)



## 2 ஆம் வருட நினைவஞ்சலி



**வரப்பிரகாசம் - போல்**

(பொலீஸ் உத்தியோகத்தர்)

மண்ணில்: 28- 04- 1949 விண்ணில்: 07- 08- 1988

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்த குலக்குன்றமே! ஈராண்டு மறைந்திடினும், ஆழ்கடல் வற்றினும் ஆதவன் ஒளி பரப்ப மறந்திடினும், எம்முயிர் உள்ளவரை உம் நினைவு என்றும் நீங்காதையா!! உமது பாசத்தையெல்லாம் எம்மீது கொட்டி வளர்த்த தந்தையே! நீரே எம் வாழ்வின் வழிகாட்டி, நீரே எம் வாழ்வின் இலட்சிய தீபமாய் விளங்க முன்னெடுத்து வாழ்வதே நாம் உமக்கு செய்யும் நன்றியப்பா.

உங்கள் ஆத்மா இறைவனில் இரண்டறக் கலக்க வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.**

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக 07- 08- 1990 செவ்வாய்க் கிழமை காலை 7 மணிக்கு புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கற் பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

[13995]


# கடந்த 50 தினங்களுக்கு மேலாக வடமராட்சி தபால்கள் ஸ்தம்பிதம்

## கப்பல் மூலம் அனுப்பும் முயற்சியும் கைகூடவில்லை

வல்வெட்டித்துறை, ஆக. 7

கடந்த 50 தினங்களுக்கு மேலாக வடமராட்சிப் பகுதியில் தபாலில் சேர்க்கப்பட்ட கடிதங்கள் வெளி மாவட்டங்களுக்கோ அல்லது வெளி நாடுகளுக்கோ அனுப்பப்படவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் தங்களது சுக செய்தியை வெளி மாவட்டங்களில் அல்லது வெளி நாடுகளில் உள்ள உறவினர்களுக்கு தெரிவிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்புவதற்காக பருத்தித்துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்ட தபால் பொதிகளுடன் வடமராட்சியில் சேகரிக்கப்பட்ட கடிதங்களின் பொதிகளை அனுப்பி வைக்க பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கரவெட்டி தபால் நிலைய அதிபர்கள் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை.

வடமராட்சி தபால் பொதிகளை அனுப்ப முடியாமல் போனது வேதனைக்குரியது. பொறுப்பு வாய்ந்த உயர் அதிகாரிகள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட்டிருந்தால் பொதிகளை அனுப்பியிருக்க முடியும் - என்று ஒய்வு பெற்ற தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்கவாகன அணியுடன் அனுப்பப்பட்ட தபால் பொதிகளிலும் வடமராட்சி தபால் பொதிகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய பாதுகாப்பு நிதிக்கு ரூபா 500 கோடி சேருமாம்

கொழும்பு, ஆக. 7

தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஐந்நூறு கோடி ரூபா சேகரிக்கும் திட்டம் பற்றிய தகவலை ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று கொழும்பு சுசரித்த மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வெளியிட்டார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் உயிர் நீத்த மற்றும் காயமடைந்த படையினர் பொலீஸாரின் நல்வாழ்வுக்கான திட்டங்களை மேற்கொள்ள இந்த நிதி பயன்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி சொன்னார்.

நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் ஐந்நூறு ரூபா வீதம் கொடுத்தால் ஐந்நூறு கோடி ரூபா வசூலாகிவிடும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## திருடன் பிடிபட்டான்

கொடிகாமம், ஆக. 07

பல கொள்ளைகள் தொடர்பாக தேடப்பட்ட திருடன் ஒருவன் மந்துவில் இல் வைத்து பிடிபட்டான்.

மந்துவில், மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் கொள்ளைகளில் ஈடுபட்டுவந்த இந்நபரை சிற்றூரவை, விழிப்புக் குழுக்களின் அங்கத்தவர்கள் பொது மக்களின் உதவியுடன் பிடித்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

(மு-75)

# நிர்வாக வசதிகளுக்காகவே இரண்டு டி. ஐ. ஜிக்களாம்!

கொழும்பு, ஆக. 7

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனிப் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களை (டி. ஐ. ஜிக்களை) நிர்வாக வசதிகளுக்காகவே அரசாங்கம் நியமித்திருக்கிறது என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்திருக்கிறது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

நிர்வாக வசதிகளுக்காகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனி பிரதி பொலிஸ் மா அதிபர்கள் நியமிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த முடிவு பின்னர் மீள் பரிசீலனை செய்யப்படும்.

இதே வேளை—

மட்டக்களப்பு எல்லைப் புறத்தைச் சேர்ந்த சில கிராமங்கள் அம்பாறை மாவட்டத்துடன் சேர்க்கப்பட்டது என்ற தகவலில் உண்மை இல்லை என்றும் ஜனாதிபதி செயலகம் விடுத்த இன்னொரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(அ-எ)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**நா, மோகனராசா (கொழும்பான்)**

மலர்வு: 26- 07- 1964
அழிப்பு: 12- 08- 1984

திதி: 07- 08 - 1990

ஆறாண்டு கடந்ததையோ ஐயா ராஜகுமார்.

ஆறாத உம் நினைவால் வாடுகிறோம் நாங்களெல்லாம்.

காண்போமா உம்போல கானகத்து தெய்வமதை.

அழகிய உன் முகத்தை அடுத்தவன் அழித்த போது

பொறுத்திடுமோ எம் நெஞ்சம் ஐயா மோகனராஜ்.

உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:

பெற்றோர், சகோதரன், சகோதரிகள், மைத்துனர், மருமக்கள், பெறாமகன்.

ஊரெழு-கிழக்கு

(13984)


## அகதிகள் எண்ணிக்கை 60 ஆயிரம்

சென்னை, ஆக. 7

நேற்று ஆயிரத்து 600 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர்.

இவர்களையும் சேர்த்து கடந்த ஜூன் மாதத்தில் இருந்து தமிழகம் சென்றுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 60 ஆயிரத்தைத் தாண்டி விட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-எ)

# பயணிகள் போக்குவரத்து தொடர்பகத்தில் பணிபுரிய இளைஞருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஆக 7

விடுதலைப் புலிகளின் பயணிகள் போக்குவரத்து தொடர்பகத்தில் பணியாற்ற இளைஞர்கள், யுவதிகளின் உதவி கோரப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் பயணிகள் போக்குவரத்து தொடர்பக பொறுப்பாளர் திரு. சலீம் விடுத்துள்ளார்.

பயணிகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பான விண்ணப்பங்கள் நிரப்புதல், விநியோகித்தல், பயணிகளின் விபரம் சேகரித்தல் என்பனவற்றில் கடமையாற்றவும் —

தற்போது பயணிகள் பாஸ் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள நெரிசலை தவிர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுமே இந்த உதவி கோரப்பட்டுள்ளது.

ஜீ.சி ஈ. [சாதாரண] தரம் வரை படித்த-இடம்பெயர்ந்த அகதிகளுக்கு - இந்தச் சேவையில் முன்னுரிமை வழங்கப்படும்.

இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்படும் அனைவருக்கும் அதற்கான சம்பளம் வழங்கப்படும். இந்தப் பணியில் சேர விரும்புவோர் உடனடியாக எம்மைச் சந்திக்கவும்.

—இவ்வாறு திரு. சலீம் மேலும் சொன்னார்.

(5-9)


## இடமாற்றம்

எமது அன்புக்குரிய தமிழீழ மக்களே! வாடிக்கையாளரின் நன்மை கருதி எமது ஸ்தாபனங்களை கீழ்க் காணும் முகவரியில் அமைத்துள்ளோம்.

**ஸ்ரீகாந் புத்தகசாலை - மக்மிலன் புத்தகசாலை**

**பருத்தித்துறை வீதி,**
[நல்லூர் கோயில் முன்பாக]
**நல்லூர்.**

★ குறிப்பு:- (இதன் கிளை ஓட்டுமடம் சந்தியிலும் இயங்கிவருகிறது என்பதை அன்புடன் அறியத் தருகிறோம்)

[சி/5292]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மாவட்டத்தில் 'ஒப்பரேஷன் ரைகர் ஹண்ட்'

கொழும்பு, ஆக. 7

வவுனியா மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கெதிரான தேடுதல் வடமாகாண இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவாவின் நேரடிப் பார்வையில் நடைபெறுவதாக ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

''ஒப்பரேஷன் ரைகர் ஹண்ட்'' — (Operation Tiger Hunt) என்று இதற்குப் பெயரிடப்பட்டிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-எ)

## அகதிகள் கவுன்சில் அதிகாரி அகதிகளைச் சந்தித்தார்

யாழ்ப்பாணம், ஆக. 7

பிரிட்டிஷ் அகதிகள் கவுன்சில் அதிகாரி திரு. மக்கலன் றொஜியர் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள அகதிகளை நேரில் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார்.

அகதிகள் நிலை குறித்தும், அவர்களுக்கு எவ்வகையான உதவிகள் தேவை என்பது குறித்தும் ஆராயும் நோக்குடன் வந்த அவர் தாளையடி, கற்கோவளம் பகுதியில் உள்ள அகதிகளுடன் கலந்துரையாடினார்.

மற்றைய பகுதிகளில் உள்ள அகதிகள் நிலை குறித்து இன்றும் நாளையும் அவர் ஆராய்வார். (இ-3)

## 18 பேரின் சடலங்கள்

கொழும்பு, ஆக 7

அம்பாறை மாவட்டத்தில் 18 பேரின் சடலங்கள் நேற்று கண்டெடுக்கப்பட்டன.

முன்னர் கடத்திச் செல்லப்பட்ட முஸ்லிம்களின் சடலங்களாக இவை இருக்கலாம் என்று நம்பப்படுகிறது (இ-எ)

## துர்க்கை அம்மன் ஆலய முகாமில் ஷெல்கள் விழுந்து 3 அகதிகள் பலி!

காங்கேசன்துறை, ஆக. 7

பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்களில் ஒன்று தெல்லிப்பழைதுர்க்கையம்மன் தேவஸ்தான வளவில் அமைந்துள்ள அகதி முகாமுக்கு அருகில் விழுந்தது. நித்திரையாக இருந்த அகதிகளில் இருவர் கொல்லப்பட்டனர்.

திங்கட்கிழமை அதிகாலை 12. 30 மணி அளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

தேவஸ்தான பெருந் தெருவுக்கு முன்பாக விழுந்த ஷெல்லுக்கே இருவரும் பலியானார்கள்.

இறந்தவர்கள் 1. திருமதி வேலாயுதபிள்ளை நேசம்மா (53 வயது) கல்லூரிவீதி, காங்கேசன்துறை.

2. இராசையா சரவணமுத்து (33 வயது) ஏழாலை.

அங்கிருந்த 25க்கு மேற்பட்டவர்கள் ஷெல் வீச்சினால் காயமடைந்தனர். இவர்களை மானிப்பாய் போதனா வைத்தியசாலைப் பிரிவுக்கும், தெல்லிப்பழை வைத்தியசாலைக்கும் எடுத்துச் செல்ல அங்கு கடமையில் இருந்த செஞ்சிலுவைச்சங்க தொண்டர்கள் உதவினர்.

மொத்தம் 5 ஷெல்கள் அங்கு விழுந்து வெடித்தன.

ஆலயத்துக்கு முன்பாக உள்ள கூட்டுறவு வைத்தியசாலைக்கு முன்பாக விழுந்து வெடித்த மற்றும் ஒரு ஷெல்லுக்கு 3 வயது ஆண் குழந்தை ஒன்று பலியானது. இந்தக் குழந்தையின் பெற்றோரும் அகதியாகவே அங்கு வந்திருந்தனர்.

மற்றைய ஷெல்களினால் அந்தப் பகுதியில் உள்ள வீடுகள் சேதமடைந்தன.

ஷெல் தாக்குதலினால் தேவஸ்தானத்துக்கோ, வீதியில் உள்ளமடங்களுக்கோ எவ்வித பாதிப்பும்ஏற்படவில்லை என்று தேவஸ்தான தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார்.

இந்த முகாமில் காங்கேசன்துறை, மயிலிட்டி, மாவிட்டபுரம் பகுதிகளைச் சேர்ந்த 900 பேர் அகதிகளாகத் தங்கி உள்ளனர். (இ-10-68)

## குண்டு வீச்சு அதிர்வினால் இடம் பெயர்ந்தோரின் வீடுகளும் திறந்த நிலையில்

யாழ். கோட்டைப் பகுதியில் உள்ள வீடுகளின் கதவுகள், ஜன்னல்கள் குண்டுவீச்சின் அதிர்ச்சியால் தானாகவே திறந்து கொள்கின்றன. கதவுகள், ஜன்னல்களின் பிணைச்சல் சேதம் அடைவதால் திறபட்ட கதவுகள், ஜன்னல்களை மீண்டும மூடி முடியாத நிலைமை இருந்து வருகிறது.

குருநகர்ப்பகுதியில் இடம் பெயர்ந்தோரின் வீடுகள் பலவும் இதே நிலையிலேயே இருந்து வருகின்றன.

குருநகர் பகுதியில் இப்படியான வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## தமக்கு முறைப்பாடு இல்லை என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஆக 7

கப்பலில வந்த உணவுப் பொருள் பழுதடைந்ததாக எந்தவித முறைப்பாடும் தமக்கு கிடைக்கவில்லை என்று அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

வத்தைகளில் இருந்து இறக்கி கரைக்கு வரும் போது சில மூடைகள் நீரில்நனைந்திருந்ததாகவும், ஆனால்பழுதடைந்ததாக எந்தவிதமுறையீடுகளும் வரவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## கிளிநொச்சிக்கும் வாகன அணி மூலம் உணவுப் பொருள்

யாழ்ப்பாணம், ஆக. 7

கொழும்பில் இருந்துவாகன அணி மூலம் கிளிநொச்சிக்கும் உணவுப் பொருள்கள் அனுப்பப்பட உள்ளன.

கொழும்பில்இருந்து நாளை புறப்படும் இந்த வாகன அணி வியாழக்கிழமை வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்குவரமுடியாதுகொழும்பில் தரித்து நிற்கும் 20 லொறிகளிலேயே இந்தப் பொருள்கள் அனுப்பப்பட உள்ளன. (இ-3)

## போதனா ஆஸ்பத்திரி விவகாரம்: செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி யாழ். வந்து திரும்பினார்

யாழ்ப்பாணம், ஆக. 7

யாழ்-போதனா வைத்தியசாலையை மீளஆரப்பித்தல், வைத்தியசாலைப் பிரதேசத்தைஅமைதிப்பிரதேசமாக்கல் தொடர்பாக பேச்சுக்களை நடத்த அவசர விஜயம் ஒன்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசச்குழுவின் இலங்கைப் பிரதிநிதி திரு. பிலிப் கொன்ரசா யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்டார்.

வாசனம் மூலம் சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வந்த அவர் முக்கியமானவர்களுடன் இந்த விடயம் தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தி ஞாயிறு மாலை கப்பல் மூலம் கொழும்பு திருப்பினார். [இ-3]

## அகதி முகாம் மீதான தாக்குதலை நிறுத்த நடவடிக்கை எடுங்கள்

### செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 7

அகதி முகாம்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்த உடன் நடவடிக்கை எடுங்கள்.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான பரிபாலன சபை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கு மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தில் அமைந்திருந்த அகதி முகாமில் இரு அகதிகள் ஷெல் தாக்குதலால் இறந்த சம்பவத்தைச் சுட்டிக்காட்டி யாழ் செஞ்சிலுவைச் சங்கக்கிளை மூலம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசு மட்டத்தில் தொடர்பு கொண்டு அகதிகள் மீது நடத்தும் தாக்குதலைநிறுத்துமாறும் கோரப்பட்டுள்ளது. [இ - 3]

## சங்கானையில் கொடும்பாவி

வட்டுக்கோட்டை, ஆக. 7

பாதுசாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் கொடும்பாவி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு சங்கானை பஸ் நிலையம் முன்பாகக் கொளுத்தப்பட்டது. [இ-161]

## ஷெல்லினால் காயம் அடைந்தோர்

யாழ்ப்பாணம். ஆகஸ்ட் 7

தெல்லிப்பளை தேவஸ்தான அகதி முகாமுக்கு முன்பாக விழுந்த ஷெல்லினால் காயமடைந்து மானிப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்போர் விவரம் வருமாறு;-

ஜோசப் ஞானப்பிரகாசம் (வயது 46), கே. கே. எஸ், மு. கணேந்திரன் (வயது 34) கே. கே. எஸ்., எஸ். கிருஸ்ணசாமி [வயது 36] கே. கே. எஸ்., செ. பவளக்கொடி (வயது 34) மயிலிட்டி, தி. புவனேஸ்வரி [வயது 36], தி. தயாளினி (வயது 16), தி. சிவாஜினி [வயது 13], தி. துஸ்யந்தன் (வயது 5),

இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். [இ-10]

## ஹிரோஷிமா அணு குண்டு நினைவு தினம்

ஜப்பான் நகரான ஹிரோஷிமாவில் முதலாவது அணு குண்டு போடப்பட்ட 45 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று உலகில் அனுஷ்டிக்கப்பட்டது

6-8-1945இல் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் உச்சக் கட்டமாக ஹிரோஷிமா மீது அமெரிக்கா முதலாவது அணுக்குண்டைப் போட்டது.

அப்போது ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் மாண்டனர்.

ஹிரோஷிமாவில் நேற்று [illegible] றன. (இ-எ)

### ★ ஈழத்தமிழர் மீது தாக்குதல்

## ஐ. நாவிடம் முறையிட பாரிஸ் கூட்டத்தில் முடிவு

சென்னை, ஆக. 7

ஈழத் தமிழர் மீது இராணுவம் நடத்தும் தாக்குதலை நிறுத்தச் செய்யுமாறு ஐக்கிய நாடுகள் சபையைக் கோருவது என்று பாரீஸ் நகரில் கூடிய ஈழத் தமிழ் பிரதிநிதிகள் முடிவு செய்திருக்கிறார்கள்.

அப்பாவி மக்களைக் கொன்றொழிக்கும் இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற செயலை உலக நாடுகள் கண்டிக்கவேண்டும் என லண்டனில் கூடிய இலங்கைத் தமிழ் அகதிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-9-5)

## சாவகச்சேரிக்கு இடம்பெயர்வு

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு யாழ். நகரில் சண்மூடித்தனமாக விமானக் குண்டு வீச்சு நடைபெற்றபோது யாழ் நகரில் இருந்து பலர் சாவகச்சேர்க்கும் இடம் பெயர்ந்திருந்தனர். அதே சமயம் யாழ். நகரக் குண்டு வீச்சினால் சாவகச்சேரிப் பகுதியிலும் வீடுகள் அதிர்கின்றன. (இ-51)

## பிறந்த தினம்

எலிஸபெத் மகாராணியாரின் தாயார் 90 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். (இ-எ)

## பொம்மர் தாக்குதலினால் கட்டடங்கள் தகர்ந்தன

யாழ் நகரப் பகுதி மீது நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் நடத்தப்பட்ட விமானத்தாக்குதல்களினால் 15க்கும் அதிகமான கடைகள் மற்றும் பலவீடுகள், கட்டடங்கள் சேதமுற்றன.

யாழ்.ஆஸ்பத்திரிக்குப் பின்பாக மின்சார நிலைய வீதியில் இரட்டைமாடி கட்டடத் தொகுதி ஒன்றின் மேல் விழுந்த பெரும் குண்டினால் அக்கட்டடத் தொகுதி தரைமட்டமானது. அருகிலிருந்த பல வீடுகள், கட்டடங்கள் பெரும் சேதமுற்றன.

யாழ். ஆஸ்பத்திரியின் பின்பகுதியும் சேதமானது.

ஆஸ்பத்திரி வீதி — வேம்படிச் சந்தியில் விழுந்த குண்டு ஒன்றினால் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு முன்னால் உள்ள பல கடைகள் பலத்த சேதமுற்றன.

குருநகர். பிரதான வீதி, பாஷையூர் ஆகிய இடங்களில் விழுந்து வெடித்த குண்டுகளினால் 25 இற்கும் அதிகமான வீடுகளும் கடைகளும் சேதமடைந்தன. (உ-10)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். கோட்டையை மீட்கச் சென்று வீரமரணமடைந்த 27 வீர வேங்கைகளுக்கும் எனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றேன்.

ஆர். நாகராசா

[தனீஸ் கபே உரிமையாளர்]

[13681] 143/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## கூரைத் தகடுகள் தேவை

அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள், தகரக் கூரைத் தகடுகள் உடனடியாகத் தேவை. கைவசம் வைத்திருப்பவர்கள் உடனடியாக 'உதயன்' பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்:-


முகாமையாளர் [நிர்வாகம்]

உதயன் பணிமனை,

இல. 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சோகம் ததும்பும் காட்சி



வீரமரணமடைந்த போராளிகளின் பூதவுடல்களுக்கு அவர்களது உறவினர்கள் அஞ்சலி செலுத்திய சோகக் காட்சி [உ-10]

# போராளிகளின் கல்லறைகள் மீது எமது போராட்டம் தீவிரமடையும்

## அஞ்சலி நிகழ்ச்சியில் யோகி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 7

தமிழருக்கு பூரண சுதந்திரம் கிடைக்க வேண்டும் தமிழீழத்தில் சுதந்திரக் காற்று வீசவேண்டும் என்ற நோக்குடன் தம்மை அர்ப்பணித்து உழைத்தவர்கள் இந்தப் போராளிகள். அவர்களின் கல்லறைகள் மீது எமது போராட்டம் தீவிரமடைகிறது.

விரைவில் தமிழனுக்கு விடிவுகாலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இக்காலத்தில் சகலரும் செயற்பட வேண்டும்.

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி.

யாழ். கோட்டை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கடந்த ஞாயிறு அதிகாலை வீரமரணமடைந்த போராளிகளுக்கு இறுதி அஞ்சலி செலுத்தப்பட்ட நிகழ்ச்சியில் அஞ்சலி உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போராளிகளின் பூதவுடல்கள் மக்கள் அஞ்சலி செலுத்துமுகமாக மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன.

மக்கள் அஞ்சலி செலுத்திய பின்னர் சுமார் 4-30 மணியளவில் வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

அங்கு பேசுகையில் திரு யோகி மேலும் தெரிவித்ததாவது:

நேற்றுவரை எம்முடனே இருந்த போராளிகளை இன்று இழந்து நிற்கிறோம்.

ஒவ்வொரு போராளியும் இறக்கும்போது எமது போராட்டத்துக்கு மேலும் வலுவூட்டிக் கொள்கிறோம்.

கட்டுக்கோப்பான சிறந்த தலைமையைக் கொண்ட, உயிர் கொடுக்கத் தயாராக உள்ள படையைக் கொண்ட இயக்கம் இன்று சிங்கள அரசுடன் போராடிக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் சகலரும் ஒன்றாக இணைய வேண்டும். ஏதோ, யாரோ போராட்டம் நடத்துகிறார்கள் என்று நினைக்காது எமது விடுதலைப் போராட்டம் என்ற எண்ணம் சகலரது மனதிலும் ஏற்பட வேண்டும்.

விரைவில் எமது போராட்டத்தில் வெற்றிகாணுவோம். தனியரசு அமைப்போம். அதன் மூலம் மரணித்த போராளிகளின் கனவுகளும் நனவாகும் — என்றார்.

திரு. தேவர் பேசுகையில்- கோட்டையை மட்டுமல்ல பலாலியையும் அகற்ற வேண்டும் இது விரைவில் நிறைவேறும் போராளிகளின் மறைவுகளின் போது மக்கள் கலந்து கொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தினால் மட்டும் போதாது. அவர்களும் போராட்டத்திலும் பங்குபற்ற வேண்டும்— என்றார்.

மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி சுந்தரி உட்பட மற்றும் பலரும் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். (அ-3-5)

## கிரானில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 7

கிரான்துறை இராணுவமுகாமிலிருந்து கடந்த ஞாயிறு காலை வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் அந்த முகாமின் காவல் அரண் ஒன்றும் தாக்குதலுக்கு இலக்கானது. (உ-9)

## துணுக்காயில் நேற்று பொம்மர் தாக்கு!

யாழ்ப்பாணம், ஆக. 7

கிளிநொச்சி துணுக்காய்ப் பகுதியில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் துணுக்காய் கமநல சேவைக்கட்டடம் சேதமுற்றது. (உ-9)

## 2 ராணுவத்தினர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஆக. 7

கடந்த வெள்ளியன்று மட்டக்களப்பு கொம்மாந்துறை இராணுவ முகாமிலிருந்து சிவில் உடையில் வந்ததாகக் கூறப்படும் எட்டு இராணுவத்தினரை நோக்கி விடுதலைபுலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் அவர்களில் இருவர் பலியானதாகச் சொல்லப்பட்டது. (உ-9)

## கோட்டை ஷெல்

யாழ்ப்பாணம், ஆக, 7

யாழ். கோட்டை முகாமிலிருந்து நேற்றுக் காலை முதல் இரவு வரை இடையிடையே ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நகரின் பல பகுதிகளிலும் இந்த ஷெல்கள் பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்தன. (ஒ)

## கண்ணிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஆக. 7

மட்டக்களப்பு புல்லுமலை முகாமிலிருந்து கடந்த சனிக்கிழமையன்று பொங்கல் வீதி வழியாக வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர். அதனால் இராணுவச் சிப்பாய் ஒருவர் கால்களை இழந்தார்.

இதனை அடுத்து இராணுவத்தினர் சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் இருந்த [illegible] சென்றதாகக் கூறப்பட்டது. (உ-9)

## கொழும்பு பள்ளிவாசல்கள் அருகே பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பில் சில பள்ளிவாசல்களுக்கு முன்னால் பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

துப்பாக்கி, சண்ணீர்ப்புகைக் குண்டுகள் ஆகியவற்றுடன் பொலீஸார் பள்ளிவாசல்கள் முன்னால் காணப்பட்டனர்.

வடக்கு, கிழக்கு சம்பவங்கள் தொடர்பாக ஜும் ஆத் தொழுகையின் பின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் எதுவும் நடைபெறாமல் தடுப்பதே இந்த பாதுகாப்பு ஏற்பாட்டின் நோக்கம் என்று கூறப்பட்டது. (உ)

# பெனாஸிரின் அரசு கலைக்கப்பட்டது!

## புதிய தேர்தலுக்கு உத்தரவு

இஸ்லாமபாத், ஆக 7

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி குலாம் இஷாக்கான் கலைத்து விட்டு புதிய பொதுத் தேர்தலுக்கு நேற்று உத்தரவிட்டார்.

பிரதமர் பதவியில் இருந்து திருமதி பெனாசிர் பூட்டோவை விலக்கிவிட்டு, ஜனாப் ஜுடசோ என்பவரை இடைக்காலப் பிரதமராகவும் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் நேற்று நியமித்தார்.

புதிய பொதுத் தேர்தல் அக்டோபர் 24ஆம் திகதி நடத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

பெனாசிரின் 20மாத ஆட்சி நேற்றுடன் முடிவுற்றதாக அறிவிக்கப்படுகிறது

இதேவேளை பெனாசிரின் ஆட்சி ஊழல் நிறைந்தது, திறமை அற்றது என்று கூறிய ஜனாதிபதி குலாம் இஷாக்கான், மக்களின் நம்பிக்கையை பெனாசிர் அரசு இழந்துவிட்டது என்று தெரிவித்தார். (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி றேணுகா கனகசுந்தரம் (சங்கீதா)

திருநெல்வேலி கிழக்கு திரு. கனகசுந்தரம் (ஜேர்மனி), பொற்கொடி தம்பதியின் அருமைப் புத்திரி செல்வி றேணுகா 5-8-90இல் அகால மரணமானார். அன்னார் பகீரதன் (ரூபன்), ராதிகா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசையா நல்லம்மாவின் அருமைப் பேத்தியும், சண்முகலிங்கம், சுந்தரலிங்கம், புஸ்பராணி, சுனகேஸ்வரி ஆகியோரின் மருமகளுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
இ. சுந்தரலிங்கம்

(13622)

### வைத்தீஸ்வரகுருக்கள் இரத்தினஐயர்

[முன்னாள் நாரந்தனை கந்தசுவாமி கோவில் பூசகர்]

வைத்தீஸ்வரகுருக்கள் இரத்தினஐயர் 5 - 8- 90இல் காலமாகி விட்டார். இவர் மீனாம்பாளின் அன்புக் கணவரும், தீனதயாபர சர்மா, நாவேந்த சர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், சதாசிவ ஐயர், சிவசுப்பிரமணிய ஐயர், யோகாம்பாள் ஆகியோரின் அன்பு சகோதரரும ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 6 - 8 - 90 நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல்
[13620]

தகவல்:
மனைவி, மக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சபாரத்தினம்

[சமாதான நீதிவான் - இளைப்பாறிய P. W. D. ஓவசியர், றக்குவானை]

சித்தன்கேணியைச் சேர்ந்த க. சபாரத்தினம் அவர்கள் சிங்கப்பூரில் சிவபதமடைந்தார்.

அன்னார் சிவபதமடைந்த நீதிநாயகத்தின் அன்புக் கணவரும், இரத்தினகுமார் [பொறியியலாளர், சிங்கப்பூர்], சிவனேஸ்வரி [சாம்பியா], சர்வேஸ்வரி, ஜெயக்குமார் [ஜேர்மனி], சிவகுமார் [இந்தியா] ஆகியோரின் அன்புத் தந்தையும், வத்சலா [ஆசிரியை, சிங்கப்பூர்], சிவஞானசுந்தரம் [கணக்காளர், சாம்பியா], சதாசிவம் [உதவி வைத்திய அதிகாரி, திருகோணமலை], வசந்தி [ஜேர்மனி], புஸ்பலதா [இந்தியா] ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகஇரத்தினவதியம்மா, மயில்வாகனம் [கொழும்பு], தெட்சணாமூர்த்தி [கொமேஷல் வங்கி, யாழ்ப்பாணம்] ஆகியோரின் சகோதரரும், சிவபதமடைந்த திருநாவுக்கரசு, சிவபதமடைந்த சுந்தரமூர்த்தி, சத்திவேல் [ஓய்வுபெற்ற தேசிய சேமிப்பு வங்கி உத்தியோகத்தர்] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1990-08-05 ஆம் திகதி சிங்கப்பூரில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி. சதாசிவம் [மருமகன்]

சித்தன்கேணி. (13623)

### திரு. சுப்பிரமணியம் தர்மபாலன்

[இளைப்பாறிய விரிவுரையாளர், மொறட்டுவப் பல்கலைக் கழகம்]

திரு. சுப்பிரமணியம் தர்மபாலன் காலமானார்.

இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலசௌந்தரி (பட்டதாரி ஆசிரியை, உருத்திரபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி), பாலசாந்தினி (நோர்வே), பாலறஞ்சன் (நோர்வே), பாலஇந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (6-8-90) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

தகவல்:
த. பாலசௌந்தரி

இல. 4, செட்டித் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[13624]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org